**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.393/2020</u>**

**நாள்– 18.02.2026**

**வா.சா. 1 – திரு.மகாராஜா**

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1) இந்த வழக்கில் நான் 3ம் வாதி. 1,2 வாதிகள் எனது பெற்றோர்கள். தாவா சொத்தினை 1,2 வாதிகள் தான் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். 2ம் வாதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் மின் இணைப்பில் சர்வே எண் மாறியுள்ளதால் அதை மாற்றித் தருமாறு வழக்கினைத் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களாக எத்தனை அயிட்ட சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் 3 அயிட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி 3 அயிட்ட சொத்துக்களின் விஸ்தீரணம் மற்றும் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.136/1A1D, 136/1A1E, 136/1A3 ஆகும். சர்வே எண். 136/1A1Dல் உள்ள தாவா 1ம் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணத்தினையும் 1,2 வாதிகள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான், ஆனால் அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. தாவா 2வது அயிட்ட சொத்து பொது கிணறு பாகம் என்றால் சரிதான். 2வது அயிட்ட சொத்தில் 1,2 வாதிகள் பேர்பாதி சொத்தினை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 2ம் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்குத் தெரியாது.

2) தாவா 2ம் அயிட்ட சொத்தில் எவ்வளவு விஸ்தீரண சொத்தினை 1,2 வாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. 3ம் அயிட்ட சொத்தில் சர்வே எண்.136/1A3ல் எவ்வளவு விஸ்தீரணம் சொத்தினை 1,2 வாதிகள் கிரையம் பெற்றார்கள் என்றால் எனக்குத் தெரியாது. மேற்படி 3 அயிட்ட சொத்துக்களில் எந்த அயிட்ட சொத்தில் உள்ள மின் இணைப்பினை எந்த அயிட்ட சொத்திற்குரியதாக மின் இணைப்பினை விளம்புகை செய்ய வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3வது அயிட்ட சொத்தான சர்வே எண்.1A3 ல் உள்ள மின் இணைப்பினை 1வது அயிட்ட சொத்தான சர்வே எண்.136/1A1D ல் உள்ளதாக விளம்புகை கோரியுள்ளேன்.

3) 3வது அயிட்ட சொத்தினை கிரையம் பெற்ற பின்பு நானோ, 1,2 வாதிகளோ சர்வே எண்.1A3 ல் மின்இணைப்பு வேண்டும் என்று விண்ணப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல, எனது தந்தை 2ம் வாதி விண்ணப்பம் செய்தார், ஆனால் 3ம் அயிட்ட சொத்தின் சர்வே எண்ணில்

ஏற்கனவே ஒரு மின் இணைப்பு உள்ளதால் அவ்வாறு கொடுக்க இயலாது என்று மறுத்துவிட்டார்கள். அவ்வாறு மின்சார வாரியம் மறுப்பு தெரிவித்த கடிதத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அவர்கள் வாய்மொழியாக தான் கூறினார்கள். 2ம் பிரதிவாதி தரப்பில் கூறுவதாவது நானோ, 1,2 வாதிகளோ மின் இணைப்பு வேண்டி மின்சார வாரியத்தில் எந்தவிதமான விண்ணப்பமும் கொடுக்கவில்லை தற்போது வழக்கிற்காக மின்சார வாரியத்தில் விண்ணப்பம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4) 3ம் அயிட்ட சொத்தில் 2ம் பிரதிவாதியின் தாத்தா ராமசாமி கவுண்டர் மின்சார வாரியத்தில் விண்ணப்பம் செய்திருந்தார் என்றால் எனக்குத் தெரியாது. 2ம் பிரதிவாதியின் தாத்தா தான் 3ம் அயிட்ட சொத்தில் மின்சார இணைப்பு வேண்டி மனு கொடுத்து அதன்பேரில் 2ம் பிரதிவாதியின் தாத்தாவான ராமசாமி என்பவருக்கு மின்சார இணைப்பு கொடுக்க கடிதம் வந்துள்ளது என்றால் எனக்குத் தெரியாது. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வா.சா.ஆ.3ல் ராமசாமி என்பவருக்கு மின் இணைப்பு கொடுப்பதாக தயார் நிலையில் இருக்க வேண்டி கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ராமசாமி பெயரில் வந்திருக்கக்கூடிய மின் இணைப்பினை வாதிகள் பெயருக்கு மின் இணைப்பினை வழங்க ஆட்சேபனை இல்லை என்று சான்றளிக்க வேண்டும் என்பதே நான் கோரியுள்ள பரிகாரம் என்றால் சரிதான். 3ம் அயிட்ட சொத்தில் தனியாக மின்இணைப்பு ஏதும் விண்ணப்பிக்காத நிலையிலும், 2ம் பிரதிவாதியின் தாத்தா பெயரில் வந்துள்ள மின் இணைப்பினை எங்களுக்கு வழங்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று உத்தரவிட பரிகாரம் எதுவும் நான் கோர இயலாது என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.2ல் தாவா 3ம் அயிட்ட சொத்தில் விண்ணப்பித்துள்ள மின் இணைப்பினைப் பொறுத்து எந்த வாசகமும் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தாத்தா ராமசாமியின் பெயரில் விண்ணப்பித்துள்ள மின்சார இணைப்பினை எங்களுக்கே கொடுக்க வேண்டும் என்று வா.சா.ஆ.2ல் சரத்துக்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். தாவா 1,3ம் அயிட்ட சொத்துக்களில் போர்வெல் ஏதும் இல்லை என்றால் சரியல்ல, தாவா 1ம் அயிட்ட சொத்தில் உள்ளது. 3ம் அயிட்ட சொத்தில் உள்ள மின் இணைப்பினை 1ம் அயிட்ட சொத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடக்

கோருவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 வழக்கிற்காக நாங்கள் தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரையம் எழுதப்பட்ட சமயத்தில் 2ம் பிரதிவாதி இளவராக இருந்த நிலையில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தினை கிரையம் பெற்றது 2ம் பிரதிவாதியைப் பொறுத்து கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியைப் பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**